# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 131/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | மகாலெட்சுமி |
| Father's /Husband Name | : | காளிமுத்து |
| Village | : | பெரும்பண்ணையூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 58 |
| Occupation | : | கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of April 2026. Both accused present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரி ராஜா எனது மகன் ஆவார். ஆஜர் எதிரி பரணி எனது மருமகள் ஆவார். எனக்கு மற்றொரு மகள் உள்ளார். அவருக்கு திருமணமாகி கணவர் வீட்டில் இருந்து வருகிறார். எனது மகன் 1ம் எதிரி ராஜா 2ம் எதிரியை திருமணம் செய்துகொண்டு தனியாக வசித்து வந்தார். 1ம் எதிரி தனக்கு குடியிருக்க வீடு இல்லை கேட்டுக்கொண்டதால் எங்களது வீட்டில் தங்க அனுமதி வழங்கினோம். நாங்கள் குடியிருக்கும் வீட்டை தனக்கு கொடுக்கவேண்டும் என்று பிரச்சனை செய்து வந்தார். நாங்கள் திருவாரூர் கோட்டாட்சியரிடம் சென்று மேற்படி பிரச்சனையை தெரிவித்தேன். அவர்கள் எங்களை வீட்டில் குடியிருக்குமாறும் ஆஜர் எதிரிகள் பிரச்சனை செய்தால் தெரிவிக்க வேண்டும் என்று பேசி சமாதானம் செய்து வைத்தார். ஆனால் ஆஜர் 1ம்எதிரி அதை மதிக்காமல் கடந்த 20.10.2021ம் தேதி மாலை சுமார் 04.30 மணியளவில் என்னையும் எனது கணவர் காளிமுத்து என்பவரையும் வீட்டைவிட்டு வெளியேறுமாறும் சொல்லி என்னை ஆஜர் எதிரிகள் இருவரும் குச்சிக்காரி தேவடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார் **(சாட்சி அழுதுகொண்டே சாட்சியமளிக்கிறார்).** 1ம் எதிரியாகிய எனது மகன் கம்பியால் என்னை இடதுபுற புருவத்தில்

அடித்தார். எனது கணவரையும் 1ம் எதிரி கழுத்தை பிடித்து நெறித்து அடித்தார். 2ம் எதிரியும் என்னை வாயில் குத்தினார். அதன்பிறகு ராமசந்திரன் என்பவர் என்னை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது குடவாசல் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னிட்டு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.07 11:31:42 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`